**இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் (இ.க.நி)

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | நியமம் | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இ.க.நி 16 மற்றும் 42 | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழவில் 12 ஊழியர்கள் சேவையாற்றிய போதிலும் 10 ஊழியர்களுக்காக மாத்திரமே பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இ.க.நி 18 | நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் போது புத்தகப் பெறுமதி பூச்சியமாக ஆனால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இ.க.நி 24 | சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற மூலதன மானியங்களை பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆணைக்குழுவின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 6 மில்லியன் தொகையான மோட்டார் வாகனத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தீர்த்துவைக்கப்படாத முற்பணக் கணக்குகளின் மீதி ரூபா 2,835,094 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டகளுக்கு மேற்பட்ட ரூபா 136,622 மீதியும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,063,622 மீதியும் 01 ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 634,850 மீதியும் காணப்பட்டன.

(ஆ) வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காகச் செலுத்தப்பட்டு மீளப்பெற்றுக்கொள்ளக்கூடியதான ரூபா 125,000 தொகையான வைப்புப் பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டம் | |
| (i) 4(1) ஆம் பிரிவு | அமைச்சரின் சிபார்சின் அடிப்படையில் அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்ற ஒரு ஆணையாளரினையும் இரண்டு உதவி ஆணையாளர்களையும் ஆணைக்குழு உள்ளடக்கி இருக்க வேண்டிய போதிலும் இம்மூன்று பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. |
| (ii) II(ஏ) ஆம் பிரிவு | புதிய ஆக்கங்கள் தொடர்பான போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு பணப் பரிசில்களையும் புத்தகங்களையும் வழங்கும் ‘‘ஆக்கபூர்வமான ஆராய்ச்சிப் போட்டியினை’’ வருடாந்தம் நடாத்துவதன் மூலம் இலங்கை மக்களுக்கு மத்தியில் புதிய ஆக்கங்களையும் ஆக்கத்திறன்களையும் மேம்படுத்துதல் மற்றும் அதற்கு ஊக்குவிப்புக்களும் வழங்கப்படவேண்டிய போதிலும் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக சனாதிபதி விருதி வழங்கும் விழா நடாத்தப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353 ஆம் இலக்க 353 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபம் | அரசாங்க நிறுவனங்களில் வாகனங்களை வறிதாக்குவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்படவேண்டிய போதிலும் வாகனங்களை வறிதாக்குவதன் மூலம் கிடைத்த ரூபா 1,036,000 பணம் திரட்டு நிதியத்திற்குச் செலவுவைக்கப்படவில்லை. |
| (இ) | 2008 திசெம்பர் 26 ஆந் திகதிய 433(1) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபம் | நிதி திட்டமிடல் அமைச்சில் பதிவுசெய்து கொண்ட வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படவேண்டிய போதிலும் அக்குழுவில் இல்லாத ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 1,562,000 பெறுமதியான பொருட்கள் கலை உலகின் புதிய ஆக்கங்களுக்கு பரிசு வழங்கும் விழாவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9:3:1 ஆம் பந்தி | ரூபா 100,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்கும் செலவுகளுக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வாகன பழுதுபார்ப்பிற்காகச் செலவுசெய்யப்பட்ட ரூபா 102,205 தொகைக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 பெப்ரவரி 22 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 5 வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | அரசாங்க நிதிப்பிரமாணம்<br>---------------------------------------------- | |
| | (i) நி.பி 155 | ஆண்டின் போது வழங்கப்பட்ட 11 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நி.பி 757(2) நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 7,472,478 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதனோடொத்த பற்றாக்குறை ரூபா 22,953,040 ஆக இருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 15,480,562 தொகையால் பற்றாக்குறையில் குறைவினைச் சுட்டிக்காட்டுகின்றது. புத்தாக்குனர்களுக்கு ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துதலுக்கான செலவுகள் ரூபா 17.9 மில்லியனால் குறைவடைதலும் வாகன விற்பனைகளிலிருந்து ரூபா 1 மில்லியன் உழைத்தலும் இப்பற்றாக்குறையில் குறைவிற்கு காரமணாக இருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 பௌதீகச் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகளை மீளாய்வாண்டு இறுதிவரையும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் | 2010-12-31 இல் உள்ளவாறான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அடையப்பட்டுள்ள விளைவுகள் |
|---|---|
| i. நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக ஆக்கத்திறனுள்ள குடிமக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் | செயற்பாடு நிறைவேற்றப்படவில்லை. |
| ii. பாடசாலைகளில் புத்தாக்குனர் சுற்றுவட்டத்தினைத் தோற்றுவித்தல் | கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தின் மூலம் அறிவூட்டல் மாத்திரம் இடம்பெற்றது பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. |
| iii. தொழில்நுட்பக் கல்லூரிகளில் புத்தாக்குனர் சுற்றுவட்டத்தினைத் தோற்றுவித்து தொழில்நுட்ப கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளையும் விழிப்புணர்வுகளையும் நடாத்துதல் | தொழில்நுட்பக் கல்லூரிகளை ஒன்றுசேர்த்து ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. |
| iv. பல்கலைக்கழகங்களில் புத்தாக்குனர் சுற்றுவட்டத்தினைத் தோற்றுவித்தல் | நிறைவேற்றப்படவில்லை |
| v. புதிய ஆக்கங்களினூடாக தேசத்தைக் கட்டியெழுப்புதல் | ‘‘கலை உலகில் புதிய ஆக்கங்களின் சிகரம்’’ எனும் பெயரில் பரிசு வழங்கும் விழா மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| vi. புதிய ஆக்கங்களின் கண்காட்சியும் விற்பனை நிலையமும் | நிர்மாணிக்கப்படவில்லை |
| vii. விஞ்ஞானரீதியான புதிய ஆக்கங்களும் ஆய்வுகளும் | ஒரு செயற்திட்டம் இடம்பெற்றிருந்தது. |

| | | |
|---|---|---|
| viii. | சனாதிபதி பரிசு வழங்கும் விழாவினை நடாத்துதல் | விழா நடாத்தப்படவில்லை |
| ix. | புதிய ஆக்கங்களுக்கான தேசி கண்காட்சிகள் | நடாத்தப்படவில்லை |
| x. | நாடு முழுவதும் 22 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் ஆக்கபூர்வமான சங்கங்களைத் தோற்றுவித்தல் | களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் நடாத்தப்பட்டது |
| xi. | நாடுகளுக்கிடையிலான புதிய ஆக்கங்களுக்காக கண்காட்சியினையும் போட்டியினையும் ஜெனீவாவில் ஏப்ரல் மாதத்திலும் சோல் நகரத்தில் திசெம்பர் மாதத்திலும் நடாத்துதல் | நடாத்தப்படவில்லை. |
| xii | சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்காக பங்குபற்றுதல் | பங்குபற்றவில்லை. |
| xiii. | ஹம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் புதிய ஆக்கங்கள் நிலையத்தினைத் தோற்றுவித்தல் | தோற்றுவிக்கப்படவில்லை |
| xiv | இறுதிக் கட்டத்தில் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக நிதி உதவிகளை வழங்குதல் | ஒரு புதிய ஆக்குனருக்கு ரூபா 75,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. |
| xv. | ஆணைக்குழவின் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் | ஒரு உத்தியோகத்தருக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

(அ) புத்தாக்குனர்களின் ஆக்கங்களை அவர்களின் அனுமதியின்றி மாற்றம் செய்தலாகாது, என்ற போதிலும் 2009 ஆம் ஆண்டில் பெயரினை மாற்றம் செய்து காட்சிகள் அடங்கிய பதாதை ஒன்று வெளிநாட்டில் நடாத்தப்பட்ட கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆராய்ச்சி நிலையம் ஒன்றாகப் பயன்படுத்துவதற்கு 2009 செப்தெம்பர் மாதத்திலிருந்து பத்தரமுல்ல பிரதேசத்தில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்றுமாடி வீட்டில் இரண்டு மாடிகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அறவீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படவேண்டிய பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ஆக்கவுரிமை அதிகாரப்பத்திரங்களை வழங்குவதற்குப் பொருத்தமான புதிய ஆக்குனர்களைத் தெரிவுசெய்து ஆக்கவுரிமை அதிகாரப் பத்திரங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இலங்கையின் புத்தாக்குனர்களின் அறிவாற்றல் ஆதனங்களின் உரிமைகள் மீறப்படும் வேளையில் அவர்களின் அறிவாற்றல் ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக சட்டரீதியான உதவிகளை வழங்குதல்.

(இ) ஆக்கவுரிமை அதிகாரப் பத்திரங்களைப் பிணையாக வைத்துக்கொண்டு அரசாங்க அல்லது ஏனைய நிறுவனங்களில் கடனைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வணிகரீதியான பெறுமதிமிக்க புதிய ஆக்கங்களைச் சிபார்சுசெய்தல்.

(ஈ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வசதிகளைத் தேடிக்கொள்வதற்கு உதவியளித்தல்.

(உ) புத்தாக்குனர்களுக்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் அனைவருக்கும் திறந்த ஆய்வுகூடம் ஒன்றினை ஆரம்பித்தல்.

(ஊ) புதிய ஆக்கங்களுக்காக செய்திப் பத்திரிகையினை அச்சிடலும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் புதிய ஆக்கங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.

(எ) புதிய ஆக்கங்களை வணிகமயப்படுத்தல்

---

இக்காலப் பகுதியில் முன்னாள் ஆணையாளரின் செயற்பாட்டுக் காலத்தின் காரணமாக நிர்வாக நடவடிக்கை செயற்பாடற்று இருந்ததுடன் அதன் காரணமாக சிறந்த மட்டத்தில் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை நிறைவேற்றமுடியவில்லை என பதில் செயலாளர் தெரிவித்திருந்தார்.

### 2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்

---

**விஞ்ஞானரீதியான புதிய ஆக்கங்கள் நிலையம்**

---

முன்னாள் ஆணையாளரின் தற்றுணிவின் பேரில் ஆணைக்குழுவினால் விஞ்ஞான ரீதியான புதிய ஆக்கங்கள் நிலையம் ஒன்று பத்தரமுல்ல பிரதேசத்தில் வாடகைக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 125,000 படி வாடகை செலுத்தப்பட்டிருந்தது. 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2010 ஆகஸ்ட் வரை கட்டிடவாடகை, மின்சாரம், நீர், தொலைபேசி ஆகிய செலவுகளுக்காக ரூபா 2,242,797 செலவுசெய்யப்பட்டிருந்தது. அதில் எதுவித செயற்பாடும் இடம்பெற்றிருக்காததுடன் 2010 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் இந்நிலையம் மூடப்பட்டிருந்தது. நிலையத்தினைத் தோற்றுவிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்படாமை மற்றும் அதற்காக செலவு செய்யப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**2.2.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

ஆணைக்குழுவின் அமைப்பு வரைபடத்தின் பிரகாரம் பதவியணியினர் 23 ஆக இருந்தும் 10 உத்தியோகத்தர்களின் வெற்றிடமான பதவிகள் நிரப்பப்படவில்லை.

**2.2.6 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்**

ஆணைக்குழுவினால் கூட்டிணைந்த திட்டம் வருடாந்தம் திருத்தம் செய்யப்படவில்லை. 2008/ 2012 காலத்திற்காகத் தயாரிக்கப்பட்டதன் பின்னர் வருடாந்தம் திருத்தம் செய்யப்படவில்லை.

**2.2.7 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 033100121791065 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் வருட இறுதியில் உள்ள மீதி ரூபா 3,184,502 ஆக இருந்ததுடன் 2010 மே மாத்திலிருந்து கணக்கு செயற்பாடற்று இருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தாக்குனர்களின் நிதியத்திலுள்ள மீதி ரூபா 2,502,375 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது புத்தாக்குனர்களுக்கு எதுவித கடன் தொகையும் வழங்கப்படவில்லை.

(இ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக 5 வாகனங்கள் இருந்த போதிலும் அதில் மூன்று வாகனங்கள் செயற்பட முடியாத நிலையில் விளைவற்றுக் காணப்பட்டது.

**2.2.8 உள்ளகக் கணக்காய்வு**

**-----------------------------------------**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று தோற்றுவிக்கப்படவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

**------------------------------------------------------------**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் ஆணையாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) செயலாற்றல்
(உ) நிர்வாகம்